which are the shifting illusions of that māyā. So that such dangers may not come, living beings have been given by Grace the power and freedom to prevent them, striving with all vigilance by their own knowledge, aided by the faculties and senses. With that freedom all living beings ought to strive to remove dangers from their bodies and to gain the soul's true gain. Where living beings suffer, unable, through destiny or carelessness, to remove the dangers that come through hunger, thirst, disease, desire, poverty, fear and murder, living beings who have the freedom to remove those dangers must remove them out of compassion. In such relief, removing sufferings other than the suffering that comes through hunger and the suffering that comes through murder is lower Jeevakarunyam, and so it brings only a little happiness in this world; removing the suffering that comes through hunger and the suffering that comes through murder is higher Jeevakarunyam, and through it one attains by Grace the happiness of this world, the boundless bliss of the siddhis and the bliss of liberation that never perishes at any time. Those who have the freedom and the knowledge to remove the dangers that come upon other living beings through destiny or carelessness, yet do not do so but deceitfully hold back, will not gain by Grace the freedom to enjoy the bliss of liberation together with the happiness of this world, and will lose even the freedom of worldly enjoyment they have now. Since God has so ordained, one must know that the chief aim of Jeevakarunyam is this: where living beings lack the knowledge and freedom to remove the dangers that come through hunger and murder by destiny or carelessness, living beings who have the knowledge and freedom to remove them should remove them out of kindness, without deceit. And one must know that the highest benefit is this: to put true faith in it, to remove with food the hunger of hungry beings, to remove by whatever means one can the

murder of beings about to be murdered, and so to bring them the joy of contentment.

**COMMENTARY –** Bodies matter because the soul grows and Grace shines through embodiment; whatever threatens the body (the seven dangers, which arise from māyā, the material source of bodies) threatens the soul's growth. Relieving other sufferings is lower (apara) Jeevakarunyam; relieving hunger and murder is higher (para) Jeevakarunyam, and only this brings, through Grace, the bliss of liberation.

Destiny (ūḻ) is the order by which the fruits of past deeds reach a being; it never excuses one who is able to help. Those who can relieve hunger or prevent murder and hold back lose even what they now enjoy.

## 23. WHY HUNGER AND MURDER COME FIRST

> *பசி, கொலை, பிணி, தாகம், எளிமை, பயம், இச்சை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்விப்பது விதியாகவிருக்கவும், இவ்விடத்துப் பசியினாலும் கொலையினாலும் வரும் அபாயங்களை மாத்திரம் நிவர்த்தி செய்விப்பது விசேஷமென்று குறித்தது என்னென்றறிய வேண்டில்:- சீவகாருணிய ஒழுக்கத்தில் அபரசீவகாருணிய மென்றும் பரசீவகாருணியமென்றும் இருவகையாம். அவற்றில் பசிநீக்கலும் கொலைநீக்கலும் பரசீவகாருணிய மாதலால் விசேஷமாகக் குறிக்கப்பட்டதென்றறிய வேண்டும். அன்றியும் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்குப் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவர்கள் தாகம் நீங்குதற்குத் தண்ணீர் கொடாமலிரார்கள். தண்ணீர் கொடுப்பது பிரயாசமுமல்ல. தண்ணீர் ஏரி குளம் கால்வாய் முதலான இடத்து மிருக்கின்றது. தாகத்தால், மாற்றிக் கொள்ளத்தக்க ஏகதேச அபாயம் நேரிடுமேயல்லது, அதனால் தேகத்திற்கு ஆனி நேரிடாது; பசியினால் மாற்றிக் கொள்ளக்கூடாத கெடுதி தேகத்திற்கு நேரிடும். பசியினால் வருந் துன்பத்தை நிவர்த்தி*

செய்விக்கத் தக்க தயவுடையவருக்குப் பிணியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதற்குத் தயவுண்டாகாமலிராது. பசி மிகுதியினாலேயே பிணிகள் விருத்தியாகின்றன. ஆகாரப் பக்குவங்களாலேயே அப்பிணிகள் நீங்குகின்றன. பிணிகளுக்கு வேறு மருந்து கொடுப்பினும், பத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு அவசியமான ஆதாரமாயிருக்கின்றது. பிணியோடு தேகத்தை நெடுநாள் வைத்திருக்கக் கூடும். ஒரு நாளாகிலும் ஆகாரமில்லாமல் தேகத்தை வைத்திருக்கக் கூடாது. பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்குவிக்கின்ற தயவுடையவர்களுக்கு, இச்சையால் வருந் துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயவு வராமலிராது. சீவர்களுக்கு உள்ளபடி பசி நேரிடுமாகில் ஆகாரத்திலல்லது மற்றொன்றிலும் இச்சையே இராது. ஆகாரங் கிடைக்கில் உண்டு பசி தீர்ந்தவர் தம் இச்சையைச் சிறிய முயற்சிகளால் முடித்துக் கொள்ளவுங்கூடும்; அல்லது சமாதானஞ் செய்து கொள்ளவுங்கூடும்; இச்சையோடு பல நாள் தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு ஒரு நாளும் வைத்திருக்க முடியாது. பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுள்ளவர்களுக்குச் சுதந்தர மற்ற சீவர்களது எளிமையை நீக்கத் தயவுவராமலிராது. பசியினால் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையே இல்லை. எளிமையைச் சில நாள் சென்று மாற்றிக் கொள்ளக் கூடும்; பசியை அவ்வாறு மாற்றிக்கொள்ளக் கூடாது. எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக் கூடும்; பசியோடு வைத்திருக்க முடியாது. பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவருக்குப் பயத்தை நிவர்த்தி செய்விப்பதில் தயவு வராமலிராது. பசியினால் வரும் பயத்திற்கும் கொலையினால் வரும் பயத்திற்கும் மேற்பட்ட பயமேயில்லை. பயத்தை உபாயத்தால் நீக்கிக் கொள்ளக்கூடும்; பசியை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக் கூடாது. பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு வைத்திருக்கப்படாது. பசியினால் வரும் அவத்தைகளுந் துன்பங்களும் கொலையினால் வரும் அவத்தைகளுந் துன்பங்களும் தம்முள் ஒத்திருக்கின்றன ஆகலால், பசியினால் வருந் துன்பத்தையும் கொலையினால் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியத்திற்கு முக்கிய லட்சிய மென்றறிய வேண்டும்.

**TRANSLATION** – If one would know why, though the rule is to remove the dangers that come through hunger, murder, disease, thirst, poverty, fear and desire, it has been marked here as special to remove only the dangers that come through hunger and through murder: in the discipline of Jeevakarunyam there are two kinds, lower Jeevakarunyam and higher Jeevakarunyam. Of these, relieving hunger and preventing murder are higher Jeevakarunyam, and so they have been marked as special, one must know. Moreover, those kind enough to remove the hunger of suffering living beings will not fail to give water to remove their thirst. Giving water is no great labor; water is there in lakes, ponds, canals and such places. Thirst brings only a partial danger that can be remedied; it does no lasting harm to the body. Hunger does the body harm that cannot be remedied. One kind enough to remove the suffering that comes through hunger cannot fail to be kind enough to remove the suffering that comes through disease. It is from excess of hunger that diseases grow, and it is by rightly prepared food that they are removed. Even if other medicines are given for disease, the prescribed diet is the support the body needs to stand. One can keep the body for a long time with disease; one cannot keep the body even for a day without food. Those kind enough to remove the hunger of the hungry with food cannot fail to be kind enough to remove the sufferings that come through desire. When living beings are truly hungry, they have desire for nothing but food. If food is found, one who has eaten and ended his hunger can fulfill his desire with small efforts, or else come to terms with it. One can keep the body for many days with desire; one cannot keep it a single day with hunger. Those kind enough to remove the hunger of hungry living beings with food cannot fail to be kind enough to remove the poverty of living beings who lack freedom. There is no poverty greater than the poverty of suffering from hunger. Poverty can be remedied after some days; hunger cannot be remedied in

that way. One can keep the body in poverty; one cannot keep it in hunger. One kind enough to remove hunger cannot fail to be kind enough to remove fear. There is no fear greater than the fear that comes through hunger and the fear that comes through murder. Fear can be removed by some device; hunger cannot be removed by any device. One can keep the body with fear; one cannot keep it with hunger. The torments and sufferings that come through hunger and the torments and sufferings that come through murder are alike. Therefore one must know that removing the suffering that comes through hunger and the suffering that comes through murder is the chief aim of Jeevakarunyam.

**COMMENTARY –** The ranking rests on one test: what can the body survive? Thirst, disease, desire, poverty and fear can be endured for a time or eased another way; hunger cannot, and murder ends life at once. So their relief is higher (para) Jeevakarunyam, and the kindness that does this will not neglect the rest.

## 24. WHY HUNGER IS STRESSED AGAIN AND AGAIN

> *பசியினால் வருந் துன்பத்தை நீக்குதலும் கொலையினால் வருந்துன்பத்தை நீக்குதலும் சீவகாருணியத்திற்கு முக்கிய லக்ஷியமாக இருக்கவும், இவ்விடத்தில் பசிநீக்குதலை மாத்திரம் அடிக்கடி வலியுறுத்துவது என்னெனில்:- ஒரு சீவன் பசியினால் கொல்லப்படு மென்பதை யறிந்து காருணியத்தால் பசியை நீக்கி உயிர், பிழைக்கும்படி செய்பவர் வேறுவகையால் உயிர்க்கொலை நேரிட்டால் அதற்கிரங்கி அந்தக் கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்யாமலிரார்கள். கொலையால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்யாதவர்கள் பசியால் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விக்கத்தக்க தயவுடையவர்க ளாகார்கள். பசியால் வருங் கொலையை ஆகாரத்தாலன்றி வேறு வகையால் நிவர்த்தி*

> *செய்விக்கப்படாது; பகை முதலியவற்றால் வருங்கொலையை அநேக உபாயத்தால் நிவர்த்தி செய்விக்கக் கூடுமாதலால், கொலையால் வருந்துன்பத்தைப் பசியால் வருந்துன்பத்திலமைத்து அடிக்கடி வலியுறுத்துகின்றதென்றறிய வேண்டும்.*

**TRANSLATION –** If one asks why, when removing the suffering that comes through hunger and removing the suffering that comes through murder are both the chief aim of Jeevakarunyam, it is only the removal of hunger that is stressed again and again here: one who knows that a living being will be killed by hunger, and out of compassion removes its hunger and lets it live, will not fail, if the murder of a life comes about in some other way, to feel pity for it and remove the suffering that comes through that murder. Those who do not remove the suffering that comes through murder will not be kind enough to remove the suffering that comes through hunger either. The murder that hunger brings cannot be prevented by any means but food, while the murder that comes through enmity and the like can be prevented by many means. One must know that this is why the suffering that comes through murder is included in the suffering that comes through hunger, and hunger is stressed again and again.

**COMMENTARY –** To Vallalar, death by starvation is murder, and only food prevents it; other murders can be averted in many ways. So the relief of hunger carries the relief of murder within it, and one who will not do the one will not do the other.

## 25. HUNGER OUTWEIGHS EVERY OTHER SUFFERING

> *அன்றியும், தாகத்தால் வருந்துகின்றவரும், பிணியால் வருந்துகின்றவரும், இச்சையால் வருந்துகின்றவரும்,*

> *எளிமையால் வருந்துகின்றவரும், பயத்தால் வருந்துகின்றவரும் பசிவருத்த முண்டாகும்போது அவ்வவ் வருத்தங்களை யெல்லாம் மறந்து பசிவருத்தம் மேற்பட்டு, ஆகாரந்தேட முயற்சி செய்கின்றார்கள். அன்றி, அரசன் ஆக்கினையால் கொலைக்குற்றம் பற்றிக் கொலை செய்ய விதிக்கப்பட்ட குற்றவாளியும் பசிவந்தபோது தன் பயத்தையும் துன்பத்தையும் மறந்து அந்தப் பசியை மாற்றிக் கொள்ள முயலுகிறான். வைத்தியரால் தாம் இறந்துவிடுவது நிச்சயமென்று தெரிந்துகொண்ட வியாதியாளரும் மூப்பாளரும் பசிவந்தபோது தமது துன்பத்தை மறந்து பசிநீக்க முயலுகின்றார்கள். பசிக்குத் தயவினால் ஆகாரங் கொடுக்கத் துணிந்தவன் வேறு வகையால் சீவர்கள் இம்சைப் பட்டழிவதற்குச் சம்மதிக்கவே மாட்டான்; ஆகலினும் பசியால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விக்கிற தருமத்தை அடிக்கடி வலியுறுத்துவதென் றறியவேண்டும்.*

**TRANSLATION –** Moreover, those who suffer from thirst, from disease, from desire, from poverty or from fear all forget those sufferings when the pain of hunger comes; the pain of hunger overpowers them, and they strive to find food. Again, even an offender whom the king's order has sentenced to be killed for the crime of murder forgets his fear and his suffering when hunger comes, and tries to relieve that hunger. The sick and the aged who have learned from their physicians that their death is certain also forget their suffering when hunger comes, and try to remove it. One who has resolved to give food out of kindness to the hungry will never consent to living beings being harmed and destroyed in any other way. For this reason too, one must know, the dharma of relieving the suffering that comes through hunger is stressed again and again.

**COMMENTARY –** Hunger outweighs every other pain, even a sentence of death or a fatal illness. And the hand that feeds will not consent to harm: feeding the hungry trains the whole heart in compassion. Dharma (tarumam) here means a righteous work of service.

# 26. WHOSE HUNGER WE MUST RELIEVE

பசியினால் வருங் கெடுதி எல்லாச் சீவர்களுக்குந் தேகநாசஞ் செய்வது உண்மையானால், எல்லாச் சீவர்கள் பசியையு மறிந்து நிவர்த்தி செய்விக்க வேண்டும்; அப்படி நிவர்த்தி செய்விக்கத் தொடங்கில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர் மனிதர் நரகர் மிருகம் பறவை ஊர்வன தாவரம் என்கிற இவ்வெழுவகைப் பட்ட அளவிறந்த பேதங்களுடைய சீவர்களது பசியை யறிந்து நீக்குவது அசாத்தியமாகுமே யென்னில்:- தேவர்கள் மனித சுதந்தரத்தினும் மேற்பட்ட சுதந்தரமுடையவர்களாய்த் தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முயற்சியினாலேயே மாற்றிக் கொள்ளத் தக்க வல்லபமுடையவர்க ளாதலால் அவர்கள் பசியைக் குறித்து மற்றவர்கள் யோசிப்பது அவசியமல்ல வென்றும் தேவர்களுக்கும் பசி நேர்ந்தால் துன்பமுண்டாகுமே யென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும்; நரகர் நாம் பசியாற்றுவிக்கத் தக்க இடங்களில் இல்லாமல் வேறிடங்களி லிருக்கின்ற படியாலும், நரகர் பசிக்குத் தண்டனைப் பரிவாரங்களால் பசியாற்றுவித்தலாலும், நரகர் பசியைக் குறித்து யோசிப்பது அவசியமல்லவென்றும், நரகரும் பசி நேரிடில் வருந்துவார்களேயென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும்; ஊழ்வகையினால் சிறிதுஞ் சுதந்தர மில்லாத மரம் புல் முதலிய தாவரங்களில் மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் முயற்சியால் விளைவிக்கின்ற தாவர வர்க்கங்களுக்குப் பசி குறித்து நீர் விடுவது அவசிய மென்றும், மற்றைத் தாவரவர்க்கங்களெல்லாம் அருள் நியதியின்படி ஆகாரங் கொடுப்பிக்க உயிர்த்திருக்கின்றனவாதலால் அவைகளுக்கெல்லாம் பசியறிந்து ஆகாரங் கொடுப்பது நமது சுதந்தரமல்ல கடவுள் சுதந்தரமென்றும், அவை குறித்து யோசிப்பது அவசியமல்ல வென்றும், ஆகாரமில்லாவிடில் வருந்துமே யென்று இரங்குதல் மாத்திரம் அவசியமென்றும்; நிலத்திலும் நீரிலும் ஊருகின்ற உயிர்களுக்கும் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் அவ்வவற்றின் ஊழ்வகைக்குத் தக்கபடி அருள் நியதி ஆகாரங் கொடுப்பிக்க

உண்டு பசியாறுகின்றன வென்றும், அவ்வவைகளுக்குத் தக்க ஆகாரம் அறிந்து கொடுப்பது நமது சுதந்தரமல்ல கடவுள் சுதந்தர மென்றும், அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்தரத்தால் சம்பாதித்துக் கொள்ளுகின்ற பசு எருது எருமைகடா ஆடு குதிரை முதலிய சில மிருகங்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியாற்றுதல் அவசியமென்றும்; மனிதர்களில் ஆண்மக்கள் பெண்மக்கள் என்றிருவகைப்பட்ட எல்லா மனிதர்களுக்கும் பசியால் வரும் நஷ்டங்களும் துன்பங்களும் பசி நிவர்த்தியால் வரும் லாபங்களும் இன்பங்களும் பொதுவில் ஒரு தன்மையாயிருந்தாலும், பசியால் வரும் நஷ்டங்களையுந் துன்பங்களையும் மன முதலான அந்தக்கரண விருத்தியினாலும் கண் முதலான இந்திரியங்களாலும் மிகவும் அறிந்து கொள்கின்ற ஆன்ம அறிவு ஒத்திருத்தலாலும், மனிதர்களுக்கு ஊழ்வகையினால் அருள் நியதியின்படி கொடுப்பிக்கின்ற ஆகாரமட்டில் சீவித்துத் தேகத்தை வைத்திருக்கக் கூடாமையாலும், தங்கள் முயற்சியாலும் அறிவாலும் சுதந்தரத்தாலும் சம்பாதிக்கின்ற, ஆகாமிய ஆகாரத்தாலும் பசியை நீக்கித் தேகத்தை வைத்திருக்க வேண்டுமாதலாலும், ஆகாமியத்தால் சம்பாதிக்கின்ற சீவசுதந்தரம் மனிதர்களுக்கு அருளால் மிகவுங் கொடுக்கப்பட்ட படியாலும்! ஊழ்வகையால் ஆகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும்படியாகவும்; அந்தப் பசியை நீக்கும் நிமித்தம் ஒருவரையொருவர் எதிர்பார்க்கும் படியாகவும்; அவர் தயவினால் ஆகாரங் கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன்முயற்சியிற் செலுத்தவும் ஆகாரங் கொடுத்தவர் சித்திமுத்திகளை யடையவும் அருள் நியதியாக விதிக்கப்பட்ட படியாலும், மனிததேகம் மற்றச் சீவதேகம்போல இலேசிலே எடுக்கக் கூடாதாகலாலும், மனித தேகத்தில் ஆன்மவிளக்கமும் அருள் விளக்கமும் மிகவும் விளங்குதலாலும், இந்த மனித தேகம் போனால் மீளவும் இந்தத் தேகம்வருமென்கிற நிச்சய மில்லாமையாலும், இந்த மனித தேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும், இந்த மனிததேக மாத்திரமே முதற் சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவையுடைய தேகமாதலாலும், மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற சீவகாருணிய விதியைப் பொதுவில்

> அவசியம் உறுதியாகப் பிடிக்கவேண்டுமென்றும் கடவுள் விதித்திருக்கின்ற படியால், பசியை ஆகாரத்தினால் நிவர்த்தி செய்விக்கின்ற சீவகாருணிய ஒழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்த வேண்டுமென்று அறிய வேண்டும்.

**TRANSLATION** – If one says: "If it is true that the harm that comes through hunger destroys the body of every living being, then the hunger of all living beings must be known and relieved. But if one sets out to relieve it so, it would be impossible to know and remove the hunger of the living beings God has created, of these seven kinds, celestials, humans, beings in hell, beasts, birds, creeping things and plants, with their countless varieties": one must know the following. Celestials have a freedom greater than human freedom and the power to relieve by their own effort the hunger that comes to them; so others need not concern themselves with their hunger, and it is necessary only to feel pity, knowing that celestials too would suffer if hunger came to them. Beings in hell are not in places where we can relieve their hunger but elsewhere, and their hunger is relieved by the attendants of their punishment; so we need not concern ourselves with their hunger, and it is necessary only to feel pity, knowing that beings in hell too suffer when hunger comes. Among trees, grass and other plants, which through destiny have no freedom at all, it is necessary to pour water, for their hunger, on the kinds of plants that people grow by their own effort to support their living. All other kinds of plants live because the order of Grace has food given to them; to know the hunger of all of them and feed them is not within our freedom but within God's. So we need not concern ourselves with them, and it is necessary only to feel pity, knowing they would suffer without food. Creatures that creep on land and in water, birds and beasts eat and relieve their hunger as the order of Grace has food given to each according to its destiny; to know and give each the food that suits it is not within our freedom but within

God's. But among them it is necessary to feed and relieve the hunger of certain animals that people acquire by their own freedom to support their living, such as cows, oxen, buffaloes, goats and horses. As for humans, men and women, the losses and sufferings that come through hunger and the gains and joys that come from its relief are in general the same for all. And God has ordained that humans alone must, in general, necessarily and firmly hold to the rule of Jeevakarunyam that relieves hunger, for these reasons: because their soul-knowledge, which knows the losses and sufferings of hunger intensely through the workings of the inner faculties such as the mind and through the senses such as the eye, is alike in all; because humans cannot keep the body alive on the food alone that destiny brings them by the order of Grace; because they must also relieve their hunger and keep the body with āgāmiya food, earned by their own effort, knowledge and freedom; because the freedom of the living being to earn by āgāmiya has been given to humans in great measure by Grace; because the order of Grace has ordained that some should go hungry and suffer when destiny brings them no food, that for the relief of that hunger they should look to one another, that another should give them food out of kindness, remove their hunger and set them on good effort, and that the one who gives food should attain the siddhis and liberation; because the human body cannot be had easily like the bodies of other living beings; because the light of the soul and the light of Grace shine most fully in the human body; because there is no certainty that this human body, once gone, will come again; because this human body is the body taken for the very purpose of attaining the bliss of liberation; and because, from the first creation, this human body alone is the body of high knowledge created by God's consent. Since God has so ordained, one must know that the discipline of

Jeevakarunyam that relieves hunger with food must be carried out chiefly among human beings.

**COMMENTARY –** Duty follows freedom. What lies beyond our reach (celestials, beings in hell, wild plants and creatures) is in God's care, and we owe it pity; what depends on us (the crops we grow, the animals we keep, and above all our fellow human beings) we must feed. Humans are chiefly charged with this because they alone must earn their food, because Grace has made them depend on one another, and because the human body is rare, uncertain to return and given for liberation. In feeding the hungry the giver, too, reaches the siddhis and liberation.

## 27. FOOD OF DESTINY AND FOOD OF EFFORT

> *ஊழ்வகைக்குத் தக்கபடி மிருகம் பறவை முதலிய சீவர்களுக்கு அருளால் நியதி ஆகார மாத்திரம் இருக்க மனிதர்களுக்கு மாத்திரம் ஊழ்நியதி ஆகாரத்தோடு ஆகாமிய முயற்சி ஆகாரமும் வேண்டுவது அவசிய மென்றது எப்படி யென்னில்:- மனிதர்கள் பிராரத்தப்படி நியதி ஆகாரத்தைப் புசித்துப் பிராரத்த அனுபவத்தை நீக்கிக் கொண்டு, ஆகாமியத்தால் முயற்சி ஆகாரத்தைப் புசித்துக் கரணேந்திரிய தேகத்தை வலுவுள்ளதாகச் செய்து கொண்டு, சன்மார்க்க சாதனத்தை அனுசரித்துச் சித்தி முத்தி இன்பங்களைப் பெறக்கடவரென்று கடவுள் விதித்திருக்கின்றபடியால், மனிதர்களுக்குப் பிராரத்த ஆகாரமும் ஆகாமிய முயற்சி ஆகாரமும் அவசியம் வேண்டுமென்று அறியவேண்டும். மிருகம் பட்சி ஊர்வன தாவரம் என்கிற சீவதேகங்கள் தண்டனை நிமித்தம் விதித்த தேகங்களாதலால், பிராரத்த ஆகாரம் கடவுள் விதித்த வண்ணம் அருட்சத்தியால் தடைபடாமல் கொடுக்கப் படுமாகலில், ஆகாமிய ஆகாரம் சம்பாதிக்க வேண்டாமென் றறிய வேண்டும்.*

**TRANSLATION –** If one asks why it was said that, while beasts, birds and other living beings have only the food

appointed by Grace according to their destiny, humans alone necessarily need, besides the food appointed by destiny, the food of āgāmiya effort as well: God has ordained that humans should eat the appointed food according to their prārabdha and so work out the experience of prārabdha; that through āgāmiya they should eat the food of their own effort and so make the body, with its faculties and senses, strong; and that, following the practice of Sanmarkkam, they should attain the bliss of the siddhis and of liberation. So one must know that humans necessarily need both prārabdha food and the food of āgāmiya effort. The bodies of living beings such as beasts, birds, creeping things and plants are bodies ordained for punishment, and their prārabdha food is given without fail by the Power of Grace as God has ordained; so one must know that they need not earn āgāmiya food.

**COMMENTARY –** Three terms meet here. Destiny (ūḻ) is the order by which the fruits of past deeds come to a being. Prārabdha karma is the karma now being lived out; the food it brings must be eaten to work it off. Āgāmiya karma is the karma being made now by present action; humans must add food earned by their own effort, so that the body is strong enough for the practice of Sanmarkkam.
Beasts, birds, creeping things and plants are fed directly by the Power of Grace; humans are given both the burden and the freedom of effort.

# 28. COMPASSION TOWARD ALL LIVING BEINGS

> *ஆனால் சீவகாருணியம் எல்லாச் சீவர்களுக்கும் பொதுவென்று முதலில் குறிக்கப்பட்டது என்ன எனில்:- சீவகாருணிய ஒழுக்கத்தில் முக்கியமாக எல்லா மனிதர்களுக்கும் பொதுவில் பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்து ஆகாரத்தினால் திருப்தி இன்பத்தை*

*உண்டுபண்ண வேண்டு மென்றும், பசியைப்போல் வேறு வகையினால் சீவகொலை நேரிடுவதானால் அந்தச் சீவகொலையைத் தம்மாற் கூடிய வரையில் எவ்விதத்திலாயினும் தடை செய்து உயிர் பெறுவித்துச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்றும், பிணி பயம் முதலிய மற்ற ஏதுக்களால் சீவர்களுக்குத் துன்பம் நேரிடில் அத்துன்பங்கள் தங்களால் நீக்கத்தக்கவை களாகில் நீக்கவேண்டுமென்றும், மிருகம் பறவை ஊர்வன தாவரம் முதலிய சீவர்களிடத்துப் பயத்தினால் வருந் துன்பத்தையும் கொலையினால் வருந் துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும், அவற்றுள் துஷ்ட சீவர்களிடத்தும் சிறிது பயத்தினால் வருந் துன்பம் மாத்திரமே யல்லது கொலையினால் வருந்துன்பங்களைச் செய்யப்படாதென்றும், இவ்வகை முழுதும் சீவ காருணியமேயாதலால் எல்லா உயிர்களிடத்தும் சீவ காருணியம் வேண்டுமென்று கடவுளால் ஆணைசெய்ததென் றறியவேண்டும்.*

**TRANSLATION –** If one then asks why it was first stated that Jeevakarunyam is common to all living beings: in the discipline of Jeevakarunyam the chief thing is to relieve the suffering that comes through hunger for all human beings alike and to give them the joy of contentment through food; if the murder of a living being comes about in some other way, as it does through hunger, to stop that murder by any means, as far as one is able, to save its life and make it glad; if suffering comes to living beings through other causes such as disease and fear, to remove those sufferings if one is able to; to remove by every means the suffering that comes through fear and the suffering that comes through murder among living beings such as beasts, birds, creeping things and plants; and, even toward the harmful creatures among them, to cause no more than a little suffering through fear, and never to inflict the sufferings that come through murder. Since all of this together is Jeevakarunyam, one must know that God has commanded Jeevakarunyam toward all lives.

**COMMENTARY –** Humans come first in feeding, but the protection of life has no boundary: every creature, plants included, is to be spared fear and murder. Even toward a dangerous creature one may at most frighten it away; one may never kill it.

## 29. NO BEING MAY BE KILLED TO FEED ANOTHER

> *மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகச் சம்பாதிக்கின்ற உயிர்களில் சில உயிர்கள் தாமச ஆகாரமாகிய மாமிச ஆகாரஞ் செய்வதானால், அவைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது அந்த ஆகாரத்தைக் கொடுத்து ஆற்றுவிக்கப்படாதோ என்னில்:- ஒரு சீவனைக் கொன்று ஒரு சீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் சீவகாருணிய ஒழுக்கமே யல்லவென்றும், கடவுள் சம்மதமும் அல்லவென்றும், இவைகட்கு முழு விரோதமென்றும் அறியவேண்டும். எல்லாச் சீவர்களும் இயற்கையுண்மை ஏகதேசங்களாகிக் கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றபடியாலும், கடவுள் இயற்கை விளக்கம் மறைபடும் போது சீவத் தன்மை இல்லாதபடியாலும், கடவுளியற்கை விளக்கமும் ஜீவனியற்கை விளக்கமும் ஒன்றோடொன்று மாறுபடாதாகலாலும், கடவுளியற்கை விளக்கமுஞ் சீவன் இயற்கைவிளக்கமும் அந்தந்தத் தேகங்களினும் விளங்குகின்ற படியாலும், ஒரு சீவனை வதைத்து அதனால் மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுதல் சீவகாருணிய ஒழுக்கத்திற்கு முழு விரோதமென்றே அறியவேண்டும்.*

**TRANSLATION –** If one asks: "Some of the creatures people acquire to support their living eat meat, which is tamasic food. When their hunger is to be relieved, may it not be relieved by giving them that food?": one must know that to kill one living being in order to relieve the hunger of another with meat is not the discipline of Jeevakarunyam at all, nor is it what God approves; it is wholly against both. All living beings are parts of the natural truth and are the

dwelling place of Grace, the natural light of God; when the natural light of God is veiled, there is no life in a being; the natural light of God and the natural light of the living being do not differ from each other; and the natural light of God and the natural light of the living being shine in each and every body. Therefore one must know that to slay one living being in order to relieve the hunger of another is wholly against the discipline of Jeevakarunyam.

**COMMENTARY** – No exception is allowed, even for an animal in our care: one being may not be killed to feed another. God's light shines equally in the one who would be eaten and the one who would eat; to slay one is to strike the very light that gives both their life. Here is the ground of plant-based living in Sanmarkkam.

# 30. THE FALSE LIGHT OF FOOD GOT BY MURDER

> *புலி சிங்கம் முதலிய மிருகங்கள் மற்றொரு சீவனைக் கொன்று தின்று தாமச ஆகாரத்தால் பசியாற்றித் திருப்தி இன்பத்தை யடைந்து சந்தோஷிக்கின்றன; அந்தச் சந்தோஷம் கடவுளியற்கை விளக்க ஏக தேசமும் சீவன் இயற்கைவிளக்க நிறைவும் என்று கொள்ளக்கூடாதோ என்னில்:- கூடாது. தாமச ஆகாரத்தால் பூரண சத்துவமாகிய கடவுளியற்கைவிளக்க ஏகதேசமும் ஏகதேச சத்துவமாகிய ஆன்ம இயற்கைவிளக்கமும் விளங்கா; இருளால் ஒளி விளங்காதது போல். இதைத் தாமச ஆகாரமென்பது. என்னையெனில்:- கடவுள் விளக்கம் வெளிப்படாதபடி ஆன்ம விளக்கத்தை மறைத்த இம்சை ஆகாரமாதலால் தாமச ஆகாரமாயிற்று. இந்த ஆகாரத்தால் வந்த திருப்தி யின்பமாகிய சந்தோஷ விளக்கம் எதனுடைய விளக்கமென்னில்:- அனாதி பசுகரணமாயாவிளக்கம் என்று அறியவேண்டும். பசு வென்பது என்னை? ஆணவம் மாயை கன்மம் என்கிற மும்மல பந்தத்தால் ஒன்றுபட்டு அறிவிழந்த ஆன்மாவையே பசு வென்பது. அப்பசுவிற்கு விளக்கந் தோன்றுவது*

> *எப்படியென்னில்:- சூரியனை மறைத்த மேகவண்ணத்திலுள்ள இருளினிடத்தும் சூரியப்பிரகாச விசேஷந் தோன்றுதலால் அவ்விருளும் விளக்கமாக வழங்குகின்றது. அது போல், அசுத்தமாயாகரணங்களும் தாமச குணமும் இருள் வண்ணமுடைய வாயினும் தம்மால் மறைக்கப்பட்ட பரசீவவிளக்க விசேஷத்தால் அசுத்தமாயாகரணமும் தாமசகுணமும் விளக்கமாக வழங்குகின்றன. இதனால், தாமச ஆகாரத்தில் வரும் விளக்கம் அசுத்தமாயாகரண விளக்கமே என்றறியவேண்டும்.*

**TRANSLATION –** If one asks: "Tigers, lions and other beasts kill and eat another living being, relieve their hunger with tamasic food, reach the joy of contentment and are glad. May that gladness not be taken as a portion of the natural light of God and the fullness of the natural light of the living being?": it may not. Through tamasic food neither the portion of God's natural light, which is perfect sattva, nor the natural light of the soul, which is partial sattva, can shine, just as light does not shine through darkness. Why is this called tamasic food? Because it is food got by violence, which veils the light of the soul so that the light of God cannot appear; so it became tamasic food. If one asks whose light it is, this light of gladness that is the joy of contentment from such food: one must know that it is the light of the bound soul's instruments of māyā, which are without beginning. What is the bound soul? The bound soul is the soul that is held together in the bondage of the three impurities, āṇava, māyā and karma, and has lost its knowledge. If one asks how light can appear to that bound soul: in the darkness of a cloud that hides the sun, something of the sun's brightness still appears, and so even that darkness passes for light. In the same way, though the instruments of impure māyā and the tamasic quality are dark in nature, the instruments of impure māyā and the tamasic quality pass for light because of the special light of God and of the living being that they hide. Therefore one

must know that the light that comes from tamasic food is only the light of the instruments of impure māyā.

**COMMENTARY** – Satisfaction got by murder is real as a feeling, but it is not the light of God or of the soul; it is the dim glow of the bound soul's instruments, like a storm cloud lit by the sun it hides. Sattva is the quality of clarity and purity; tamas, of darkness.
The bound soul (pasu) is held by the three impurities (mummalam): āṇava, the root impurity that narrows the soul's knowledge; māyā, the material source of body and faculties; and karma, deeds and their fruits.

## 31. HOW PLANT FOOD KEEPS JEEVAKARUNYAM

> *ஆனால் மரம் புல் நெல் முதலான தாவரங்களும் உயிராகவே சொல்லப்படுகின்றனவே, அவைகளை இம்சைசெய்து ஆகாரமாகக் கொண்டால் அவை தாமச ஆகார மல்லவோ, அதனால் வந்த சந்தோஷம் அசுத்த மனோகரண சந்தோஷமல்லவோ என்னில்:- மரம் புல் நெல் முதலான தாவரங்களும் உயிர்கள்தான். அவைகளை இம்சைசெய்து ஆகாரங்கொண்டால் அது ஏகதேச தாமச ஆகாரந்தான். அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்தகரண சந்தோஷந்தான். ஆனாலும் அப்படியல்ல. மரம் புல் நெல் முதலான சீவர்கள் பரிசமென்கிற ஓரறிவையுடைய சீவர்களாதலாலும், அவ்வுடம்பில் சீவவிளக்கம் ஒருசார் விளங்குதலாலும், அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும் மற்ற வித்துக்கள் போல் சடமாதலாலும், அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர் விளைவு செய்யக்கூடுமாதலாலும், அவ்வுயிர்களை வேறுசெய்யாமல் அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாமல் உயிர் தோன்றற்கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும் காய்களையும் கனிகளையும் பூக்களையும் கிழங்குகளையும் தழைகளையும் ஆகாரங்களாகக் கொள்வதேயன்றி அவ்வுயிருள்ள முதல்களை ஆகாரமாகக் கொள்ளாதபடியாலும், அவைகளில் வித்து காய் கனி*

> *முதலானவை கொள்ளும்போது சுக்கிலம் நகம் ரோமம் முதலிய வைகளை வாங்கும் போது இம்சை உண்டாகாமை போல் இம்சை உண்டாகாத படியாலும், தாவர வர்க்கங்களுக்கு மன முதலான அந்தக் கரணங்கள் விருத்தி யில்லாதபடியாலும் அது உயிர்க்கொலையுமல்ல; துன்ப முண்டுபண்ணுவது மல்ல; அதனால் அது சீவகாருணிய விரோதமாகாது. அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் சீவவிளக்க சகிதமான கடவுள் விளக்கமேயாகு மென்று அறியவேண்டும்*

**TRANSLATION –** If one asks: "But trees, grass, paddy and other plants are also said to be lives. If they are harmed and taken as food, is that not tamasic food, and is the gladness that comes from it not the gladness of the impure mental faculties?": trees, grass, paddy and other plants are indeed lives. If they are harmed and taken as food, that is indeed partly tamasic food, and the gladness that comes from that food is indeed the gladness of the impure faculties. But that is not what happens here. Trees, grass, paddy and the like are living beings with one sense, touch; the light of life shines in their bodies only in part; the seeds from which those lives arise are inert, like other seeds; we ourselves can sow those seeds and raise life from them; without harming those lives, we take as food only the seeds, vegetables, fruits, flowers, tubers and leaves that appear on them as inert things without life, places where life may arise, and we do not take the living plants themselves as food; when seeds, vegetables, fruits and the like are taken from them, no harm arises, just as none arises when semen, nails or hair are taken; and plants have no development of the inner faculties such as the mind. For these reasons it is neither the murder of life nor the causing of suffering, and so it is not against Jeevakarunyam. One must know that the gladness that comes from that food is the light of God together with the light of the living being.

**COMMENTARY –** Vallalar grants the principle: to harm a plant for food would be partly tamasic. His way avoids that

harm. One takes what grows on the plant (seed, vegetable, fruit, flower, tuber, leaf) as one takes hair or nails, without taking the life of the plant, whose one sense is touch and which has no mind to suffer. Food so taken carries the light of God and of the living being.

## 32. WHY SEEDS ARE INERT

> *மர முதலிய தாவரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிரேறுதற் கிடமாகிய சடங்க ளென்பது எப்படியென்னில்:- வித்துக்களில் சீவனிருந்தால் நிலத்தில் விதையா முன்னமே விளைய வேண்டும்; நிலத்தில் விதைத்த காலத்தும் சில வித்துக்கள் விளையாமலே யிருக்கின்றன. அன்றியும் வித்தென்பது காரணம். இந்தக் காரணம் உடம்பு தோன்றுதற்கே யென்று சிறு பிள்ளைகளாலும் அறியப்படும். அன்றி உயிர் நித்தியம், உடம்பு அநித்தியம்; நித்தியமான உயிர் காரணம் வேண்டாது; அநித்தியமாகிய உடம்பே காரணம் வேண்டும். ஆகலில் வித்துக்களைச் சடமென்றறிய வேண்டும். ஆனால் வித்துக்களிடத்து ஆன்மாக்கள் ஏறுவது எப்படி யென்னில்:- நிலத்திற் கலந்த வித்திற்கு நீர்விடில் அந்த நீரின் வழியாகக் கடவுள் அருள் நியதியின்படி ஆன்மாக்கள் அணுத் தேகத்தோடு கூடி நிலத்திற் சென்று அந்நிலத்தின் பக்குவ சத்தியோடு கலந்து வித்துக்களினிடமாகச் செல்கின்றன வென்று அறிய வேண்டும்.*

**TRANSLATION –** If one asks how seeds that appear on trees and other plants can be called inert things, places where life will later enter: if there were life in seeds, they would sprout before ever being sown in the soil; and even when sown in the soil, some seeds never sprout. Again, a seed is a cause, and even small children know that this cause is for a body to appear. Again, life is eternal and the body is not; eternal life needs no cause; only the body, which is not eternal, needs a cause. Therefore one must know that seeds are inert. If one then asks how souls enter seeds: one must know that when water is given to a seed mixed into the soil,

souls, joined to an atomic body, go into the soil through that water by the order of God's Grace, mingle with the ripening power of that soil and pass into the seeds.

**COMMENTARY –** Three proofs that a seed is inert matter (sadam): it does not sprout unsown, some never sprout, and a cause serves the perishable body, not eternal life. Life enters only when the sown seed is watered, by the order of Grace; so eating seeds takes no life.

# 33. WHY SPROUTS MUST NOT BE PLUCKED

> *முளைகளையே பிடுங்கப்படா தென்று சிலர் சொல்கின்றார்கள்; வித்து காய் இலை முதலியவைகளைப் புசிக்கலாமென்று சொல்வதெப்படி யென்னில்:- வித்து நிலத்திற் படிந்தபின் நீர் வழியாக ஆன்மாவானது சென்று பக்குவ சத்தியிற் கலந்து வித்திலேறி முளைத்தபடியால், முளையானது வித்து காய் முதலியவைகளைப் போலச் சடமல்ல. ஆகலால், முளைகளைப் பிடுங்கப்படாதென்பது உண்மையென்று அறிய வேண்டும்.*

**TRANSLATION –** Some say that sprouts must not be plucked. If one asks how, then, it can be said that seeds, unripe fruits, leaves and the like may be eaten: once the seed has settled in the soil, the soul travels by way of the water, mingles with the ripening power, enters the seed and sprouts. The sprout, therefore, is not inert matter like seeds, unripe fruits and the rest. Know, then, that the saying that sprouts must not be plucked is true.

**COMMENTARY –** A sprout is no longer inert: a soul has entered it. So the rule against plucking sprouts is true, while seeds, fruits and leaves, which are inert, may be eaten.

# 34. NO IMPURITY IN SEEDS AND FRUITS

> *வித்து காய் கனி முதலியவற்றில் உயிர்க்கொலை இல்லாவிடினும் நகம் ரோமம் சுக்கிலம் முதலியவற்றிலிருக்கிற அசுத்தமாவதில்லையோ என்னில்:- தத்துவவிருத்தியும் தாது விருத்தியும் இல்லாதபடியால் அசுத்தமுமில்லை.*

**TRANSLATION** – If one asks, "Even if there is no murder of life in seeds, unripe fruits, ripe fruits and the like, do they not carry the impurity that is in nails, hair, semen and the like?": since they have no growth of the tattvas and no growth of the bodily tissues, there is no impurity in them either.

**COMMENTARY** – The tattvas are the constituent principles of which body and mind are built; the dhātus are the bodily tissues. Nails, hair and semen come from a body that has both. Seeds and fruits have neither, so they carry no such impurity.

# 35. PLANT FOOD IS NOT CONTRARY TO JEEVAKARUNYAM

> *ஆகலில் மரம் புல் நெல் முதலியவைகளின் வித்து காய் கனி தழை முதலியவற்றைப் புசிப்பது சீவகாருணிய விரோதமல்ல என்றறிய வேண்டும்.*

**TRANSLATION** – Therefore know that eating the seeds, unripe fruits, ripe fruits, leaves and the like of trees, grass, paddy and other plants is not contrary to Jeevakarunyam.

**COMMENTARY** – This closes the argument on plant food. What is taken from a plant without destroying the living plant is not contrary to Jeevakarunyam. Flesh cannot be had without murder; that is where the line falls.

# 36. FLESH-EATING IS HABIT, NOT NATURE

> *மாமிச ஆகாரம் புலி முதலாகிய துட்ட மிருகங்களுக்கு நியதி ஆகார மல்லவோ என்றறிய வேண்டில்:- அது அவ்வுயிர்களுக்குச் சிருஷ்டி நியதி ஆகார மல்ல; பரம்பரை வழக்கத்தாற் பெற்ற ஆகாரமாமென் றறியவேண்டும். ஆகலில், அதை நிவர்த்தி செய்வித்துச் சத்துவ ஆகாரங்களைப் புசிப்பிக்கும்படி செய்யவுங் கூடும்; ஒரு சீலமுடையவன் கிரகத்தில் வழங்குகின்ற பூனைக்கும் நாய்க்கும் வேறிடங்களிற் போய் அசுத்த ஆகாரங்கொள்ளாமல் காவல் செய்து அடிநாள் தொடங்கிச் சுத்த ஆகார வழக்கமே செய்விக்கின்றான்; அவைகள் அவைகளைப் புசித்து உயிர் வழங்கி வருகின்றன. அப்படியே புலி சிங்கம் முதலிய துட்டவர்க்கங்களையும் மேல்நின்று சுத்த ஆகாரத்தில் பழக்குவாரில்லாமையால் அசுத்தாகாரங்களைப் பழக்கத்தாற் புசிக்கின்றனவென் றறியலாம்.*

**TRANSLATION –** If one would know whether flesh is not the ordained food of fierce animals such as the tiger: know that it is not the food ordained for those beings at creation; it is food acquired through inherited habit. It is therefore possible to wean them from it and make them eat sattvic food. A man of good conduct keeps watch over the cat and the dog that live in his house, so that they do not go elsewhere and eat impure food, and from their earliest days accustoms them to pure food alone; they eat it and live. In the same way one may know that tigers, lions and the other fierce kinds eat impure food from habit, because there is no one over them to train them in pure food.

**COMMENTARY –** Flesh-eating, Vallalar holds, is not the law of any creature's nature but a habit handed down, and habit can be changed. The household cat and dog, raised from the start on pure food, live on it. Fierce animals eat flesh only because no one has trained them otherwise.

# 37. NEVER MURDER ONE BEING TO FEED ANOTHER

> *ஆகலில், ஒரு சீவனைக்கொன்று மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுவித்தல் கடவுளருளுக்குச் சம்மதமுமல்ல, சீவகாருணிய ஒழுக்கமுமல்ல என்று சத்தியமாக அறியவேண்டும்.*

**TRANSLATION –** Therefore know for truth that to murder one living being in order to relieve the hunger of another is neither acceptable to the Grace of God nor the discipline of Jeevakarunyam.

**COMMENTARY –** This is the verdict of the whole argument on food. Relieving hunger never justifies taking a life: Jeevakarunyam removes suffering; it does not move it from one being to another.

# 38. THE TWO KINDS OF BLISS

> *இந்தச் சீவகாருணிய மென்கின்ற சாதனத்தில் சாத்தியமாகின்ற இன்பம் அபர இன்பமென்றும் பரஇன்பமென்றும் இருவகைப்படும்.*

**TRANSLATION –** The bliss attained through this means called Jeevakarunyam is of two kinds: lower bliss and higher bliss.

**COMMENTARY –** Apara iṉpam, lower bliss, and para iṉpam, higher bliss. The next paragraphs show what divides them: whether the suffering relieved is a want or is hunger. Neither is yet the supreme bliss (pēriṉpam) of Part 2.

# 39. LOWER BLISS: RELIEVING WANT

> *இச்சை முதலியவைகளைப் பற்றி உண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் அபர இன்பமாகும்.*

*அவை இம்மையில் அனுபவிக்கின்ற இன்பங்களில் சிலவென்றறிய வேண்டும். அவை எவையென்னில்:- உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும், இருப்பதற்கு இடமில்லாமலும், உழுவதற்கு நிலமில்லாமலும், பொருந்துவதற்கு மனைவியில்லாமலும், விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலிய வேறு வேறு கருவிகளில்லாமலும் துன்பப்படுகின்ற சீவர்கள் விஷயத்தில் சீவகாருணியந் தோன்றி, உடுப்பதற்கு வஸ்திரம், இருப்பதற்கு இடம், உழுவதற்கு நிலம், பொருந்துவதற்குப் பெண், விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்தபோது, பெற்றுக்கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்ப விளக்கமும், அந்த இன்பத்தைக் கண்டு கொடுத்தவர்களுக்கு உண்டாகின்ற இன்ப விளக்கமும் கடவுள்கரணத்தில் ஏகதேசமும் சீவகரணத்திற் பூரணமுமாகத் தோன்றுகின்றவை யாகலால் அது அபர இன்பமென் றறியவேண்டும்.*

